(ii) சென்னை துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவர அனுமதி கேட்டிருக்கிறார்கள். அந்தச் சம்பவம் எப்படி நம்முடைய விதி 50 (10)-ன் படி, அரசினருடைய பொறுப்புக்குள் வருகிறது என்பதை மட்டும் விளக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

DR. H. V. HANDE : I shall read the notice of my motion.

"I move—

That the business of this House stands adjourned to discuss an urgent matter of public importance namely, the strike by about 2,500 Madras Port and Dock Workers belonging to the "listed labour" category due to non-payment of dearness allowance and attendance allowance."

I request that this House adjourns its business to discuss ways and means of resolving this strike and to re-establish cordial relationship between the management and the workers.

I shall briefly tell how this subject comes under the responsibility of the Government. A similar situation arose a few months ago. Then the Chief Minister was good enough to invite the representatives of the dock workers and the representatives of the Central Government, convened a conference and settled the strike in an amicable way. In a similar way either the Leader of the House or the Minister for Law can call the representatives and try to solve it in an amicable way. The labour wants attendance allowance of two rupees and sixteen paise. It is possible for the Government to take such a step. Though this is essentially a matter relating to the Central Government, it can be taken up by the State Government and solved amicably to the advantage of these 2,500 workers.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே,
துறைமுகத் தொழிலாளர்களுடைய பிரச்சினை மத்திய அரசின் தொழி
லாளர் துறை கவனிக்க வேண்டிய பிரச்சினையாகும். அந்தத் துறை சவ மு. ப 10-30
னித்துக்கொண்டிருக்கிறது. மாநில அரசுக்கு உள்ள அதிகாரத்தின்
அடிப்படையில், நேரிடையாகத் தலையிடுவதற்கு வழி இல்லை. ஆனால்,
மாநில அரசு, நேரிடையாக இல்லாமல், அதைக் கலந்து ஒரு சுமுகமான
முடிவு ஏற்படுவதற்கு உதவி செய்யும் வகையிலேதான் மூன்று மாதங்
களுக்கு முன்னால் உதவி செய்தது. மத்திய அரசு தொழிலாளர் துறை
கவனம் செலுத்திக்கொண்டிருக்கும் காரணத்தால், அவர்கள் இதற்கு
முடிவு கட்டுவார்கள் என்று எதிர்பார்க்கும் காரணத்தால் எந்த அளவுக்கு
உதவி செய்ய முடியுமோ அந்த அளவு மாநில அரசு உதவி செய்ய
இயலும். ஆனால், இதில் முழுப்பொறுப்பும் மத்திய அரசு தொழிலாளர்
துறையைச் சார்ந்ததாக இருக்கும் காரணத்தால், இந்த மன்றம் விவா
தித்து முடிவு எடுப்பதற்கு வாய்ப்பு ஏற்படவில்லை. சட்டத்தின் அடிப்படை
யில் இந்த மாநில அரசு தலையிடுவதற்கில்லை. ஆனால், அமைதி நிலை
உருவாக வேண்டும், தொழிலாளர்களுக்கு நன்மை ஏற்பட வேண்டும்
என்பதற்கு உதவி செய்கின்ற வகையில் உதவி செய்ய வேண்டிய அவசியம்
ஏற்படுகிற நிலைமையில் இந்த அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்
என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது, தமிழக அரசின் பொறுப்பில் தெளிவாக அடங்கியுள்ள காரியமாக இருக்கவில்லை. ஆகையால், இதற்கு எனது அனுமதியை மறுக்கிறேன்.